முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை

**இடைநிலை மனு எண்.04/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.137/2017**

மு. அகஸ்டின் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. முருகன்
2. ஸ்ரீராம்
3. பரத்குமார் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 08.01.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராஜேஷ் கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 27.11.2025 அன்று இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18 மற்றும் பிரிவு 151ன்படி, பிரதான வழக்குரையை இதன் மனு சீர்திருத்த விவரத்தில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.04 18:18:17 +0530

1) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது வழக்குரை 1ம் தபசில் சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதான வழக்கில் எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டு, வாதியான மனுதாரர் தரப்பு விசாரணை முடிவுற்று தீர்ப்பிற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், இந்நீதிமன்றத்திற்கு சில சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக 08.10.2025 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், 1ம் தபசில் சொத்து தற்போது உட்பிரிவான 118B/3A மற்றும் 118B/3B–ல் அமைந்துள்ள விபரத்தினை குறிப்பிட்டு ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், அதனை இவ்வழக்கின் 1ம் தபசில் விபரத்தில் குறிப்பிட்டு தெரிவிக்க வேண்டியது அவசியமானதாகும் என்றும், எனவே, மேற்படி உட்பிரிவு எண்களை குறிப்பிட்டு வழக்குரை தபசில் விபரத்தில் சீர்திருத்தம் செய்தால் மட்டுமே, வழக்கில் மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கப்பெறும் என்றும், இல்லையெனில் மனுதாரரின் வழக்கு மனுதாரருக்கு எதிராகிவிடக்கூடும் என்றும், எனவே, பிரதான வழக்குரையை இதன் மனு சீர்திருத்த விவரத்தில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மனுவின் 3ம் எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் ஆஜராகாததால் இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

3) <u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.02.04 18:18:23 +0530

5) மனுதாரரால் இம்மனுவானது பிரதான வழக்குரையை இதன் மனு சீர்திருத்த விவரத்தில் கண்டவாறு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது பிராது 1ம் தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் மனுதாரர் தரப்பில் 1ம் தபசில் சொத்து தற்போது உட்பிரிவான 118B/3A மற்றும் 118B/3B–ல் அமைந்துள்ள விபரத்தினை குறிப்பிட்டு ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், அதனை இவ்வழக்கின் 1ம் தபசில் விபரத்தில் குறிப்பிட்டு தெரிவிக்க வேண்டியது அவசியமானதாகும் என்றும், எனவே, மேற்படி உட்பிரிவு எண்களை குறிப்பிட்டு வழக்குரை தபசில் விபரத்தில் சீர்திருத்தம் செய்தால் மட்டுமே, வழக்கில் மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கப்பெறும் என இம்மனுவில் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) மேலும், இந்நிலையில் இந்நீதிமன்றமானது, “ Rani Vs. Dhanalakshmi Ammal & others, 2018(3) TNLJ Civil 598” என்ற முன்தீர்ப்பினை பார்வையிட்டபோது மேற்படி வழக்கில் நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> *"14) The power of the Court to allow the amendment is very wide and can be exercised at any stage of the proceeding. The Court should adopt a liberal approach in allowing the amendment and the amendment should not be disallowed on hyper technical grounds. The power is entirely discretionary to be used judiciously on a consideration of the facts and circumstances of each case. The rule allows at any stage all amendments which satisfy the two conditions (a) of not working injustice to the other side, and(b) of being necessary for the purpose of determining the real questions in controversy between the parties. If the amendment changes the cause of action or introduces a new case, the amendment should not be allowed.*

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.04 18:18:29 +0530

*15) As for the first part of the provision, the law permits a party to amend his pleadings which are essential for determining the real question in controversy between the parties and as far as this part is concerned, the Courts are to liberally approach the matter.”*

9) மேற்கண்ட நமது மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பின்படி ஒரு வழக்கின் விசாரணை எந்த கட்டத்திலிருந்தாலும் வழக்குரையில் திருத்தம் செய்வதற்கான அனுமதியை வழங்க கூடிய அதிகாரம் நீதிமன்றத்திற்குள்ளது. வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு அனுமதியளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களை எளிமையான அணுகுமுறையில் பரிசீலிக்க வேண்டும். அந்தந்த வழக்கு சங்கதிகள் மற்றும் சூழ்நிலையின் அடிப்படையில் தனக்குள்ள உளத்தேர்வு அதிகாரத்தை நீதிமன்றம் பயன்படுத்த வேண்டும். அந்த திருத்தமானது a) மறு தரப்பினர்களுக்கு அநீதியை ஏற்படுத்தாது மற்றும் b) வழக்கு தரப்பினர்களுக்கிடையே எழுந்துள்ள பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு அந்த திருத்தம் அவசியமானது என்கிற இரண்டு காரணங்களின் அடிப்படையில் வழக்குரையில் திருத்தம் செய்வதற்கான அனுமதியை அந்த வழக்கு எந்த கட்டத்தில் இருந்தாலும் நீதிமன்றம் அனுமதிக்கலாம் என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

10) அசல் வழக்கானது பிராது 1ம் தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் மனுவில் கோரப்பட்டுள்ள திருத்தங்கள் இவ்வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முற்றிலுமாக தீர்மானிக்க அவசியமானது ஆகும்.

11) மேலும் இம்மனுவிற்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், அசல் வழக்கில் தரப்பினர்களுக்கிடையே எழுப்பப்பட்டுள்ள கட்சிகளின்படியும், இந்த வழக்கில் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனை முற்றிலுமாக தீர்மானிக்கவும், மேலும் தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.04 18:18:36 +0530

மற்றும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

13) **இறுதியாக:-**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 12.02.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 12.02.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.04 18:18:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

- இல்லை -

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.04 18:18:47 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.04/2025
in
O.S.No.137/2017

**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 04.02.2026**